சுருக்கம்

மகளிர் திட்டம் – மணிமேகலை விருதுகள் 2008–09 – பத்து (10) சிறந்த சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஐந்து (5) ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தேர்ந்தெடுத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–3) துறை

அரசாணை (நிலை) எண். 127

நாள் 11.11.2009.
ஐப்பசி – 25,
திருவள்ளுவர் ஆண்டு – 2040
படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.172, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–2) துறை, நாள் 24.11.2006.
2. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரின் கடித எண்.533/டி1/2009, நாள் 4.11.2009.

*******

ஆணை:-

மகளிர் திட்டத்தினை சீரிய முறையில் செயல்படுத்துவதில் பங்குகொள்வதை ஊக்குவிப்பதற்காக மாநில அளவில், மிகச் சிறந்த ஐந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், பத்து மிகச் சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கும் மற்றும் மாவட்ட அளவில் ஒரு சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கும் மூன்று சிறந்த சுய உதவிக்குழுக்களுக்கும் 'மணிமேகலை விருதுகள்' வழங்கவும் இந்த விருதிற்கு தேர்வு செய்வதற்கான விரிவான வழிமுறைகளையும் வகுத்து முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2008–09 ஆம் ஆண்டிற்கான மாநில அளவில் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு விருது பெறுவதற்காக 25 மாவட்டங்களிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட கருத்துருக்கள் அனைத்தும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன தலைமை அலுவலர்களால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும், 2.11.2009 அன்று ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பொறுப்பாளர்கள் மாநில தேர்வுக்குழு முன் சாதனைகளை விவரித்ததாகவும் இவற்றின் அடிப்படையில் மாநில தேர்வுக்குழு கவனமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையை ஆய்வு செய்து அவ்வாய்வின் அடிப்படையில் 2008–09 ஆம் ஆண்டிற்கான மாநில விருதுக்கான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பட்டியல் ஒன்றை தயாரித்துள்ளதாகவும், அவ்வாறே மாநில அளவிலான சுயஉதவி குழுக்களுக்கான விருது பெறுவதற்கு 25 மாவட்டங்களிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட கருத்துருக்கள் அனைத்தும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன தலைமை அலுவலர்களால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும் 3.11.2009 அன்று சுயஉதவிக் குழுவின் பொறுப்பாளர்களின் விரிவான சாதனை விளக்கங்களை கேட்டறிந்த பின்னர் மாநில தேர்வுக்குழு இவற்றை கவனமாக ஆய்வு செய்து அவ்வாய்வின்

அடிப்படையில் மாநில அளவிலான மணிமேகலை விருதுக்கான சுயஉதவி குழு பட்டியல் ஒன்றை தயாரித்துள்ளதாகவும் மேற்கூறிய பட்டியலில் இருந்து ஐந்து (5) சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் பத்து (10) சிறந்த மகளிர் சுயஉதவி குழுக்களை மாநில அளவிலான மணிமேகலை விருது பெறுவதற்கு தேர்வு செய்யுமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அனுப்பிய மேற்கூறிய கருத்துருவினை அரசு மிகவும் கவனமாக பரிசீலனை செய்து, தகுதியின் அடிப்படையில் கீழ்க்கண்ட ஐந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும், பத்து சுயஉதவி குழுக்களையும் 2008–09 ஆம் ஆண்டிற்கான மணிமேகலை விருது பெறுவதற்கு தகுதியானவை என்று தேர்வு செய்து அரசு ஆணையிடுகிறது.

அ. விருது பெற தகுதி வாய்ந்த ஐந்து சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்.

| வ. எண் | மாவட்டம் | வட்டாரம் | கூட்டமைப்பின் பெயர் |
|---|---|---|---|
| 1 | வேலூர் | ஜோலார்பேட்டை | ஏலகிரி மலை |
| 2 | நாமக்கல் | மல்லசமுத்திரம் | இராமாபுரம் |
| 3 | திருவண்ணாமலை | போளூர் | படவேடு |
| 4 | நீலகிரி | கோத்தகிரி | ஜக்கனாரை |
| 5 | திருவாரூர் | மன்னார்குடி | மூன்றாம்சேத்தி |

ஆ. விருது பெறத் தகுதி பெற்ற பத்து சிறந்த சுய உதவிக்குழுக்கள்

| வ. எண் | மாவட்டம் | வட்டாரம் | ஊராட்சி / நகராட்சி | சுய உதவிக் குழுவின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | தருமபுரி | பென்னாகரம் | தித்தியாப்பன அள்ளி | ஓம் சக்தி |
| 2 | வேலூர் | கீ. வ. குப்பம் | பசுமாத்தூர் | கங்கா |
| 3 | ஈரோடு | ஈரோடு | மேட்டு நாசுவம்பாளையம் | தாமரை |
| 4 | திருவண்ணாமலை | ஜவ்வாதுமலை | கானமலை | ஸ்ரீ சக்தி |
| 5 | தூத்துக்குடி | உடன்குடி | குதிரைமொழி | கற்பகத்தரு–II |
| 6 | தஞ்சாவூர் | கும்பகோணம் | அண்ணலக்ரஹாரம் | சுடர் ஒளி |
| 7 | திருநெல்வேலி | கீழப்பாவூர் | இராஜகோபாலபேரி | ஸ்டார் |
| 8 | கரூர் | கரூர் | ந. புகளூர் | அன்னை |
| 9 | கோயம்புத்தூர் | பெரியநாயக்கன் பாளையம் | 24 –வீரபாண்டி | காவேரி |
| 10 | நாகப்பட்டினம் | செம்பனார்கோயில் | 28 –திருச்சம்பள்ளி | ரோஜா மலர் |

4. மணிமேகலை விருதுகள் வழங்கப்படும் இடம் மற்றும் நாள் பற்றிய விபரங்கள் பின்னர் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரால் தனியாக அறிவிக்கப்படும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை – 600 032.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 600 015.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
(மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு கழகம் மூலமாக)
அனைத்து திட்ட அலுவலர்கள் (மகளிர் திட்டம்)
(மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு கழகம் மூலமாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 600 035,
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 600 006/600 018.

<u>நகல்</u>
நிதி (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை), சென்னை– 600 009,
மாண்புமிகு துணைமுதலமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.